குடியிருப்புக் கட்டடங்களை எழுப்ப நான்கு நிலப் பகுதிகள் வெளியீடு

சிங்கப்பூரில் இவ்வாண்டின் இரண்டாம் பாதிக்குரிய அர சாங்க நில விற்பனைத் திட்டத் தின்கீழ் இடம்பெறும் நான்கு குடியிருப்பு நிலப் பகுதிகளை நகர மறுசீரமைப்பு ஆணையமும் வீடமைப்பு வளர்ச்சிக் கழகமும் வெளியிட்டு உள்ளன.

உட்லண்ட்ஸ் டிரைவ் 17ல் கட் டப்பட இருக்கும் எக்சகியூட்டிவ் கொண்டோமினியம், லெண் டோர் கார்டன்சில் உள்ள குடியிருப்பு வட்டார மனை ஆகியனவும் அந்தப் பட்டியலில் அடங்கும்.

தரைப்பகுதி வர்த்தகத்திற்கும் முதல் தளம் குடியிருப்புக்கும் கட் டப்பட இருக்கும் மரினா கார் டன்ஸ் லேன் மற்றும் ரிவர் வேலி கிரீன் (பார்சல் பி) ஆகியன அந் தப் பட்டியலில் இடம்பெற்று உள்ள எஞ்சிய இரு நிலப் பகு திகள்.



நான்கு நிலப் பகுதிகள் தொடர்பான கூடுதல் விவரங்களை வீடமைப்பு வளர்ச்சிக் கழக இணையத் தளத்தில் தெரிந்து கொள்ளலாம். **படம்: பிஸ்னஸ் டைம்ஸ்**

அவற்றில் லெண்டோர் கார் டன்ஸ் மற்றும் ரிவர் வேலி கார் டன்ஸ் பகுதிகளின் காலி மனை பகுதியில் 500 வீடுகளும் ரிவர் வேலி கார்டன்சில் 474 வீடு களும் கட்டுவதற்கான சாத்தியம் உள்ளது.

2024 இரண்டாம் பாதிக்கான அரசாங்க நில விற்பனைத் திட் டத்தின் உறுதிசெய்யப்பட்ட பட் டியல் வாயிலாக வெளியிடு வதற்கு ஒதுக்கப்பட்ட 5,050 வீடு களின் ஒரு பகுதி அவை.

இருப்பினும், மரினா கார் டன்ஸ் மற்றும் உட்லண்ட்ஸ் டிரைவ் 17ல் அமைந்துள்ள காலி மனைகள், முன்பதிவு செய்யப் கள் உறுதிசெய்யப்பட்ட பட்டிய லின்கீழ் விற்பனைக்கு விடப்பட் டவை.

லெண்டோர் கார்டன்ஸ் நிலப் பட்ட பட்டியலின்கீழ் விண்ணப் பம் செய்வதற்கு உரியவை.

அவற்றில் மரினா கார்டன்ஸ் நிலப்பகுதியில் 390 வீடுகளும் உட்லண்ட்ஸ் டிரைவ் 17ல் 420 எக் சகியூட்டிவ் கொண்டோமினிய வீடுகளும் கட்டப்படலாம்.

வரவிருக்கும் அரசாங்க நில விற்பனைத் திட்டத்தில் அமைய இருக்கும் தனியார் வீடுகளின் நிலையான விநியோகத்தைத் தொடர்ந்து கடைப்பிடிக்க இருப்ப தாக அரசாங்கம் தெரிவித்து உள்ளது.

ரிவர் வேலி கிரீன் (பார்சல் பி) நிலப் பகுதிக்கான ஏலக்குத் தகை அடுத்த ஆண்டு பிப்ரவரி 7ஆம் தேதி நண்பகல் வரை நடைபெறும் என்றும் லெண்டோர் கார்டன்ஸ் நிலப்பகுதிக்கான ஏலக்குத்தகை ஏப்ரல் 3ஆம் தேதி நண்பகலில் நிறைவடையும் என் றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

நான்கு நிலப் பகுதிகள் தொடர்பான கூடுதல் விவரங் களை வீடமைப்பு வளர்ச்சிக் கழக இணையத்தளத்தில் தெரிந் துகொள்ளலாம்.

அரசாங்க நில விற்பனைத் திட்டம் என்பது சந்தையின் நிலத் தன்மையை நிர்வகிக்கவும் வீட மைப்புக்கான தேவையைச் சமா ளிக்கவும் கைகொடுக்கக்கூ டியது.

ஒரு மாதத்திற்கு முன்னரே உண்மையைச் சொல்லியிருப்பேன்: ரயீசா கான்

கி. ஜனார்த்தனன்

பொய் சொன்னதை ஒப்புக் கொள்ள பாட்டாளிக் கட்சித் தலைமைச் செயலாளர் பிரித்தம் சிங் தன்னிடம் கேட்டுக்கொண் டிருந்தால் 2021 அக்டோபர் 4ஆம் தேதி நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வின்போது உண்மையைச் சொல்லியிருப்பேன் என்று அக் கட்சியின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் ரயீசா கான் தெரிவித்துள்ளார்.

பிரித்தம் சிங் நாடாளுமன்ற சிறப்புரைக் குழுவினர் முன் னிலையில் பொய்யுரைத்ததாக இரண்டு குற்றச்சாட்டுகள் தொடர்பாக வியாழக்கிழமை (அக்டோபர் 17) நடைபெற்ற நான் காவது நாள் நீதிமன்ற விசாரண யின்போது அவர் இவ்வாறு கூறினார்.

2021 அக்டோபர் 4ஆம் தேதி நடைபெற்ற நாடாளுமன்ற அமர் விற்கு முந்திய நாளில் திரு சிங், பொய் கூறியதைத் தெளிவுபடுத் தக் கேட்டிருந்தால், திருவாட்டி கான் எப்படியும் தன்னைத் தயார்ப்படுத்தியிருப்பார் என்று அரசாங்க வழக்கறிஞர் சிவகு மார் ராமசாமி கூறினார்.

திரு சிங், உண்மையைக் கூறச் சொல்லியிருந்தால் தாம் நாடாளுமன்றத்தில் அறிக்கை ஒன்றைத் தயாரித்திருப்பேன் என்று நீதிமன்ற விசாரணையின் மூன்றாம் நாளில் திருவாட்டி



பாட்டாளிக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரயீசா கான், அரசு நீதிமன்றத்திற்குள் நுழைகிறார். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

கான் சொன்னதை வழக்கறிஞர் சிவகுமார் சுட்டினார்.

தாம் கூறியது பொய் எனச் சொல்லும்படி திரு சிங் கேட் டிருந்தால் 2021 நவம்பர் 1ஆம் தே தி தாம் பொய்யுரைத்ததை ஒப்புக் கொண்டதாக வெளியிட்ட அறிக் கையைப் போன்ற ஓர் அறிக் கையை அக்டோபர் 4ஆம் தேதியே தயாரித்திருப்பேன் என திருவாட்டி கான் கூறினார்.

அந்த அறிக்கையின் வரை வைப் பாட்டாளிக் கட்சித் தலை வர்களுக்கும் கட்சித் தோழர்கள் லோ பெய்யிங்கிற்கும் யுதிஷ்த்ரா நாதனுக்கும் அனுப்பியும் இருந் திருப்பேன் என அவர் கூறினார்.

"இந்த (அக்டோபர் 4) நாடா ளுமன்ற அமர்வுக்கு முன்னதா கவே நாங்கள் சந்தித்திருப் போம்," என்றார் திருவாட்டி கான்.

பாலியல் குற்றம் தொடர்பான வழக்கு ஒன்றைக் காவல்துறை முறையாகக் கையாளவில்லை என்று செங்காங் குழுத் தொகுதி முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினருமான திருவாட்டி கான் 2021 ஆகஸ்ட் 3ஆம் தேதி நாடா ளுமன்றத்தில் தெரிவித்திருந் தார்.

பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளான 25 வயதுப் பெண் ஒரு வர், அது குறித்து புகாரளிக்க காவல் நிலையத்துக்குச் சென்ற போது தாமும் அவருடன் சென்ற தாக திருவாட்டி கான் கூறியிருந் தார்.

அப்பெண்ணிடம் விசாரணை நடத்திய அதிகாரி, அவர் அணிந்திருந்த ஆடைகள் பற்றி முறையற்ற கருத்துகளைத் தெரிவித்ததாகவும் அவர் மதுபா னம் அருந்தியிருந்ததைச் சுட்டிக் காட்டியதாகவும் திருவாட்டி கான் சொல்லியிருந்தார்.

ஆனால், இதுகுறித்து தாம் பொய் சொன்னதாக அதே ஆண்டு நவம்பர் 1ஆம் தேதி அவர் நாடாளுமன்றத்தில் ஒப்புக் கொண்டார்.

இந்நிலையில், அரசுத் தரப் பின் மறுவிசாரணை வியாழக் கிழமை (அக்டோபர் 17) காலை தொடங்கியதற்குமுன், திரு வாட்டி கானை மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய தற்காப்புத் தரப்பு வழக்கறிஞர் ஆன்ட்ரே ஜுமாபோய், நீதிபதி லியூக் டானிடம் கேட்டிருந்தார்.

அதற்கு துணைத் தலைமைச் சட்ட அதிகாரி ஆங் செங் ஹோக், "இது வழக்கத்திற்கு மாறானது. குறுக்கு விசாரணை முடிந்துவிட்டது. இருந்தபோதும் ஒரு விவகாரத்தைப் பற்றியது என்றால் நான் எந்த இடரையும் ஏற்படுத்த விரும்பவில்லை," என் றார்.

இதற்குப் பிறகு திரு ஜுமா போய், "ஆகஸ்ட் 8 ஆம் தேதி நீங்கள் பிரித்தம் சிங்கைக் காணச் சென்றபோது, அந்தச் சந்திப்பின்போது உங்களை நாடாளுமன்ற சிறப்புரிமைக் குழு விற்குக் கொண்டுசெல்வது பற் றிய எந்தப் பேச்சும் எழவில்லை என்கிறேன் - நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா மறுக்கிறீர் களா?" எனக் கேட்டார்.

திருவாட்டி கான், இதனை மறுப்பதாகப் பதிலளித்தார். அதையடுத்து நீதிமன்றம், திரு வாட்டி லோ பெய் யிங்கை விசா ரித்தது.

janark@sph.com.sg

மனிதநேயத்துடன் பிறர்நலம் பேணும் அன்புள்ளங்களுக்கு விருது

ரவி சிங்காரம்

இறுதிகட்டப் பராமரிப்பிலிருக் கும் (palliative care) நோயாளிக ளுடன் மரணத்தை எதிர்நோக் கும் வேதனையைப் பகிர்ந்து, அவர்களது இறுதிப் பயணம் வரை பக்கபலமாக இருந்துவரு கிறார் மவுண்ட் எலிசபெத் நொவீனா மருத்துவமனையின் தாதிமை மேலாளர் நரிந்தர்ஜீத் கோர், 62.

45 ஆண்டுகளாகத் தாதியா கப் பணிபுரிந்துவரும் இவர், சிங் கப்பூர் பொது மருத்துவமனை, டோவர் பார்க் ஹாஸ்பிஸ் ஆகிய வற்றில் பணியாற்றியதிலிருந்து ஏறக்குறைய 20 ஆண்டுகளாக இறுதிகட்டப் பராமரிப்புக்காகத் தம்மை அர்ப்பணித்துள்ளார்.

"மரணத்தை எதிர்நோக்கும் நோயாளிகள் அதை ஏற்றுக் கொள்ள மிகவும் சிரமப்படுவர். அவர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் ஆறுதல் படுத்துவேன்.

"இறக்கும்போது அவர்களது ஈமச்சடங்குக்குச் சென்று அக் குடும்பங்கள் நிறைவை நாட ஆதரிப்பேன்," என்கிறார் நரிந்தர் ஜீத்.

தற்போது 50க்கும் மேற்பட்ட தாதிகளை ஒரு தாயாக அவர் வழிநடத்துகிறார். தமக்கான நேரத்தில் பல்வேறு அமைப்புகள், வழிபாட்டு இடங்களுக்கும் சென்று சுகாதார விழிப்புணர்வை யும் அவர் ஏற்படுத்துகிறார்.

அவரது அன்புள்ளத்துக்காக அவருக்கு வியாழக்கிழமை (அக்- டோபர் 17) சுகாதாரப் பராமரிப்பு மனிதநேய விருதை (Healthcare Humanity Award) அதிபர் தர் மன் சண்முகரத்னம் வழங் கினார்.

நரிந்தர்ஜீத்தைப் போல் பொது, தனியார் சுகாதாரத் துறைகளில் மகத்தான சேவைபு ரிந்த 61 தனிநபர்களும் 16 குழுக் களும் இவ்வாண்டு இவ்விரு தைப் பெற்றனர்.

'சார்ஸ்' தொற்றுநோய்க்கு எதிராகப் போராடியவர்களைக் கௌரவித்த 2003ஆம் ஆண்டின் 'தைரியம்' விருதுகளின் தொடர்ச்சியாக, 2004ஆம் ஆண்டு முதல் இவ்விருதுகள் ஆண்டுதோறும் வழங்கப்படுகின் றன.

'குழுவுணர்வே எங்களின் உந்துசக்தி'

இவ்வாண்டு விருது வென்ற 16 குழுக்களில் ஒன்று தேசிய தொற்றுநோய் நிலையத்தின் 'கிளினிக் ஜே'. அதன் சார்பாக அதிபரிடமிருந்து விருதைப் பெற் றார் அதன் மூத்த தாதிமை மேலாளர் இம்ரானா பானு கிதர் முகமது, 39.

"சிங்கப்பூரில் எச்ஐவியால் பாதிக்கப்பட்ட பெரும்பாலானோ ருக்கு கிளினிக் ஜே சிகிச்சை யளிக்கிறது. குரங்கம்மை, கொவிட்-19, தட்டம்மை போன்ற



'பரிவு' பிரிவில், இவ்வாண்டின் சுகாதாரப் பராமரிப்பு மனிதநேய விருதை அதிபர் தர்மன் சண்முகரத்னத்திடமிருந்து பெற்றார் மவுண்ட் எலிசபெத் நொவீனா மருத்துவமனையின் தாதிமை மேலாளர் நரிந்தர்ஜீத் கோர், 62. **படம்: எம்ஓஎச் ஹோல்டிங்ஸ்**

தொற்றுநோய்ப் பரவல்கள் ஏற் படும்போது நாங்கள் உடனடியாக எதிர்முயற்சிகளில் இறங்கு வோம்," என்றார் இம்ரானா.

நோய்த்தொற்றுப் பரவல் களின்போது தம் சொந்த நேரத் தையும் ஆரோக்கியத்தையும் தியாகம் செய்யும் இவர்கள் தொடர்ந்து நோய்க்கு எதிராகப் போராட வழிவகுப்பதுதான் குழு வுணர்வு.

"தாதிமைத் துறையில் மன உளைச்சல் சற்று கூடுதலாகத் தான் இருக்கும். கொவிட்-19 காலத்தில் அன்றாடம் வெகு நேரம் பணியாற்றினோம். ஆனால், குழு சோர்வடையாமல் இருக்கவேண்டும் என்பதற்காக ஒருவரையொருவர் பார்த்துக் கொள்வோம். தாதிகள் நலமாக இருப்பதால் நோயாளிகளின் மன நலனும் மேம்படுகிறது.

"எங்கள் அன்பினால்தான் தங்களால் சிகிச்சைக்கு வர முடிவதாகப் பலரும் கூறுகின் றனர்," என மனநிறைவோடு கூறினார் கிட்டத்தட்ட 35 பேர் கொண்ட 'கிளினிக் ஜே'யை வழிநடத்தும் இம்ரானா.

இதுவரை குழுவாக, தேசிய சுகாதாரக் குழுமத்தின் குழு அங் கீகார விருதுகளை இம்ரானா மூன்று முறை வென்றுள்ளார். தனிநபராக தேசிய தின விருது களிலும் அவர் அங்கீகரிக்கப்பட் டுள்ளார்.

rsingaram@sph.com.sg

தீபாவளி: பேருந்து, ரயில் சேவைகளின் நேரத்தை நீட்டிக்கும் எஸ்எம்ஆர்டி

தீபாவளியை முன்னிட்டு மேலும் சில பேருந்து, ரயில் சேவைகளின் இயக்க நேரம் அக்டோபர் 30ஆம் தேதி நீட்டிக் கப்பட்டுள்ளது.

அந்தத் தகவலை எஸ்எம் ஆர்டி நிறுவனம் வியாழக்கிழ மையன்று (அக்டோபர் 17) அறிக்கை மூலம் வெளியிட்டது.

அக்டோபர் 30ஆம் தேதி இரவு வடக்கு-தெற்கு, கிழக்கு- மேற்கு, வட்டப் பாதை, தாம்சன் - ஈஸ்ட் கோஸ்ட் பாதை ஆகிய வழிகளில் செல்லும் ரயில்க ளின் கடைசி சேவை நேரம் மாற்றப்பட்டுள்ளது.

வடக்கு- தெற்கு, கிழக்கு- மேற்கு பாதைகளின் கடைசி ரயில் சேவை நள்ளிரவுக்குப் பின் 12.30 மணிக்கு (அக்டோபர் 31) சிட்டி ஹாலில் இருந்து புறப் படும்.

வட்டப்பாதையில் ஹார்பர் ஃபிரண்ட் நிலையத்தில் இருந்து ரயில் இரவு 11.30 மணிக்கும் (அக்டோபர் 30), டோபி காட் நிலையத்தில் இருந்து இரவு 11.55 மணிக்கும் புறப்படும்.

தாம்சன்- ஈஸ்ட் கோஸ்ட் பாதையில் உட்லண்ட்ஸ் நார்த் நிலையத்தில் இருந்தும் பேஷோர் நிலையத்தில் இருந் தும் கடைசி ரயில் சேவை நள் ளிரவுக்குப்பின் 12.12 மணிக்கு (அக்டோபர் 31) புறப்படும்.

புக்கிட் பாஞ்சாங் இலகு ரயில் பாதையிலும், தானா மேராவுக்கும் சாங்கி விமான நிலையத்திற்கும் இடையிலும் ரயில் சேவைகள் எப்போதும் போல் செயல்படும். அவற்றின் சேவை நேரம் நீட்டிக்கப்பட வில்லை.

எஸ்எம்ஆர்டியின் 18 பேருந்துகளின் சேவை நேரமும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

300, 301, 302, 307, 983A, 901, 911, 912A, 912B, 913, 920, 922, 973A, 181, 240, 241, 243G, 974A ஆகிய பேருந்துகளின் சேவை நேரம் அக்டோபர் 30ஆம் தேதி நள்ளிரவுக்குப் பின்னும் இருக் கும். ரேந்துச் சேவை தொடர் பான தகவல்களுக்கு www.smrt.com.sg இணையப் பக்கத்தை நாடலாம்.

தீபாவளிக்காக எஸ்பிஎஸ் டிரான்சிட் நிறுவனமும் வடக்கு- கிழக்கு ரயில் பாதை, டௌன் டவுன் ரயில் பாதை ஆகிய வழிகளில் செல்லும் ரயில் களின் சேவை நேரத்தை நீட்டித் துள்ளது.

நிதி நெருக்கடியில் தவித்த மீன் பண்ணை நிபந்தனை அடிப்படையில் விற்பனை

லிம் சூ காங்கில் உள்ள எட்டு மாடி மீன் பண்ணையை நிபந் தனைகளின் அடிப்படையில் வாங்க இரு நிறுவனங்கள் ஒப் புக்கொண்டு உள்ளன.

'அப்போலோ அக்குவாகல் சர்' குழுமத்தின் துணை நிறு வனமான 'அப்போலோ அக்கு வேரியம்' நடத்தி வந்த அந்த மீன் பண்ணை $65 மில்லியன் செலவில் உருவாக்கப்பட்டது.

ஈராண்டுகளுக்கும் மேலாக அது நிதி நெருக்கடியைச் சந் தித்து வந்த நிலையில், தற் போது ஒருவழியாக இரண்டு நிறுவனங்கள் அதனை வாங்க முன்வந்துள்ளன.

உள்ளூர் கட்டுமான, பொறியியல் நிறுவனமான 'எச் பிசி பில்டர்ஸ்', மீன் பண்ணைத் துறையில் கிளைகளை நடத்தி வரும் முதலீட்டு நிறுவனமான 'அக்குவாசாம்ப்' ஆகியன அந்த நிறுவனங்கள்.

இருப்பினும், அந்த மீன் பண் ணையைக் கையகப்படுத்தும் நடவடிக்கைக்கு சிங்கப்பூர் உணவு அமைப்பு (SFA) அனு மதி அளிக்க வேண்டும்.

அது குறித்து அந்த அமைப்பை 'ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்' தொடர்புகொண்டு கேட்டபோது பதிலளிக்க அது மறுத்துவிட்டது.

சிங்கப்பூரின் ஆக உயரமான மீன் பண்ணைகளில் ஒன்றான அப்போலோ மீன் பண்ணை 2021ஆம் ஆண்டு செயல்படத் தொடங்கியது.

சிங்கப்பூரின் நிலச் சிக்கனத் திற்கு உதவும் வகையில் மீன் பண்ணையின் பல்வேறு பணிகளை அந்நிறுவனம் உயர் மாடிகளில் உள்ளடக்கியது.

இருப்பினும், அதனை நடத் தும் தலைமை நிறுவனமான அப் போலோ அக்குவாகல்சர் குழு மம் நிதி நெருக்கடியில் சிக்கிய பின்னர் அந்த மீன் பண்ணை முடங்கியது. 2022 மே மாதம் முதல் அது நீதிமுறை நிர்வாகத் தின்கீழ் கொண்டுவரப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 2023ஆம் ஆண்டின் தொடக்கப் பகுதியில் மீன் பண்ணையின் செயல்பாடுகளை அப்போலோ அக்குவேரியம் முழுமையாக நிறுத்தியது. நிதி நெருக்கடியில் உள்ள நிறுவனங்கள் கலைந்து போவதைத் தடுக்கும் நோக்கில் கடன் மறுசீரமைப்பை மேற் கொள்வதே நீதிமுறை நிர்வா கம்.

அந்த நிர்வாகத்தின்கீழ், பாதிக்கப்பட்ட நிறுவனத்தின் கடன் விவகாரங்கள், வர்த்தகம் மற்றும் சொத்துகளை நிர்வ கிக்க சுயேச்சையான நீதிமுறை மேலாளர் ஒருவர் நியமிக்கப்படு வார்.

சிங்கப்பூர் நிறுவனமான அப் போலோ அக்குவாகல்சர் குழு மத்திற்கு ஐந்து துணை நிறு வனங்கள் உள்ளன. அவற்றில் அப்போலோ அக்குவேரியம் மட் டுமே இயங்குகிறது.

இதர 4 நிறுவனங்களும் கலைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கிவிட் டன.